ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2019 திசெம்பர் 13 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 ஒத்தோபர்

### முக்கிய பண்புகள்

*இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக 2019 ஒத்தோபரில் வர்த்தகப் பற்றாக்குறை (ஆண்டிற்கு ஆண்டு) சுருக்கமடைந்தது. இறக்குமதிகள் மீதான ஒன்றுசேர்ந்த செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் ஏற்றுமதிகளிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் விளைவாக 2019இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சுருக்கமடைந்தது. அதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் காணப்பட்ட வீழ்ச்சி 2019 ஒத்தோபரில் மேலும் கட்டுப்படுத்தப்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்களில் ஒன்றுசேர்ந்த வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதும் 2019 ஒத்தோபரில் (ஆண்டிற்கு ஆண்டு) மேம்பட்டது. நிதியியல் கணக்கில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த வேளையில் அரச பிணையங்கள் சந்தை 2019 ஒத்தோபரில் சிறிதளவு தேறிய உட்பாய்ச்சலைத் தோற்றுவித்தது. ஒத்தோபர் மாத காலப்பகுதியில் செலாவணி வீதம் கலப்பு அசைவொன்றினைப் பதிவுசெய்ததுடன் இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராகத் தொடர்ந்தும் உயர்வடைந்தது.*




இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/ta/node/6181

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | ஒத் 2018 ஐ.அ.டொ. மில் | ஒத் 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன- ஒத் 2018 ஐ.அ.டொ. மில் | சன- ஒத் 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 979 | 977 | -0.2 | 9,877 | 9,960 | 0.8 |
| இறக்குமதிகள் | 1,882 | 1,816 | -3.5 | 18,734 | 16,412 | -12.4 |
| வர்த்தக மீதி (தேறிய) | -903 | -838 | | -8,857 | -6,451 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 287 (ஆ) | 223 (இ) | -22.5 | 3,538(ஆ) | 2,806 (இ) | -20.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 599 | 607 | 1.3 | 5,876 | 5,537 | -5.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -36 | -10 | | 1 | 5 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 1,091 | 206 | | 5,404 | 6,244 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 17 | 57 | | 698 | 511 | |
| நீண்ட காலக் கடன்கள் | 75 | 150 | | 1,206 | 1,333 | |
| கூட்டுக் கடன்கள் | 1,000 | - | | 1,000 | - | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 2,500 | 4,400 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 252 | 164 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (உ) | | | | 1,422 | 501 | |
| திரண்ட நிலுவை | | | | -157 | 667 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை


(அ) தற்காலிகமானது
(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2019 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2019 ஒத்தோபரில் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை 2018 ஒத்தோபரின் ஐ.அ.டொலர் 903 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 838 மில்லியனுக்குச் சுருக்கமடைந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 8,857 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 6,451 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 2,405 மில்லியனால் சுருக்கமடைந்தது. இவ்வீழ்ச்சிக்கான முக்கியமான பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.


- அதேவேளை, ஏற்றுமதிகளின் நியதிகளில், இறக்குமதிகளின் தொடர்பான விலையினைப் பிரதிபலிக்கின்ற, வர்த்தக மாற்று விகிதம், இறக்குமதிகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுமதி விலைகள் வேகமான வீதத்தில் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 5.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) தேய்வடைந்தது. ஒன்றுசேர்ந்த நியதிகளில், 2019இன் முதல் பத்து மாத காலப்பகுதியில், வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம் 1 : வா்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைவதற்கு பங்களித்த முக்கிய காரணிகள்: 2019 சனவரி – ஒத்தோபர் (ஐ.அ.டொ. மில்லியன்)**





**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வா்த்தகப் பற்றாக்குறை (2018 - 2019)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வா்த்தக மாற்று விகிதம் (2018 – 2019)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி


## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2019 ஒத்தோபரில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 0.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) ஐ.அ.டொலா் 977 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்தளவு வேளாண்மை ஏற்றுமதிகளே காரணமாக அமைந்தது.
- 2019 ஒத்தோபரில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு சிறுவேளாண்மை உற்பத்திகள் தவிர்ந்த அனைத்துத் துணை வகைகளிலுமிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது. இதன்படி, தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, ஏற்றுமதி அளவுகள் அதிகரித்தமைக்கிடையிலும் சராசரி ஏற்றுமதி விலைகள் பன்னாட்டுச் சந்தை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில்

குறைவடைந்தமையே காரணமாகும். மேலும், வாசனைத் திரவியங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு கறுவாவின் தாழ்ந்த ஏற்றுமதி விலைகளும் நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக கராம்பு மற்றும் மிளகின் ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்தமையுமே முக்கிய காரணங்களாக அமைந்தன. ஐக்கிய அமெரிக்கச் சந்தையிலிருந்தான குறைந்த கேள்வியின் காரணமாக கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.


- புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2019 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட சிறியளவு வீழ்ச்சியினைத் தொடர்ந்து, 2019 ஒத்தோபரில் அதிகரித்தமைக்கு அனைத்து முக்கிய சந்தைகளிலுமிருந்து ஆடை ஏற்றுமதிகளுக்கான கேள்வி உயர்வடைந்தமை ஆதரவாக அமைந்தது. எனினும், பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்டமைக்கு பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த மசகெண்ணெய் விலைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் காணப்பட்ட தாழ்ந்த நீர்க்கல எரிபொருளின் விலைகளே முக்கிய காரணமாகும்.
- 2019 ஒத்தோபரில், மொத்த ஏற்றுமதிகளில் 0.4 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தமைக்கு, இரும்புத் தாதுக்கள், உலோகக் கழிவுகள் மற்றும் சாம்பல் கட்டிகளின் ஏற்றுமதிகளே வழிவகுத்தன.
- 2019 ஒத்தோபரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 13.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) மேம்பட்ட வேளையில், ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளே முழுத் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 2: வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | ஒத் 2018 ஐ.அ.டொ. மில். | ஒத் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-ஒத் 2018 ஐ.அ.டொ. மில். | சன-ஒத் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **757.4** | **762.1** | **0.6** | **7,657.0** | **7,839.0** | **2.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 42.7 | 38.7 | (9.5) | 389.9 | 376.0 | (3.6) |
| விலங்குத்தீன் | 8.3 | 14.2 | 70.5 | 91.1 | 109.1 | 19.7 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 426.6 | 441.6 | 3.5 | 4,354.5 | 4,628.4 | 6.3 |
| இதில் ஆடைகள் | 395.8 | 407.9 | 3.1 | 4,062.7 | 4,305.6 | 6.0 |
| புடவைகள் | 23.0 | 25.4 | 10.2 | 213.4 | 235.8 | 10.5 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.8 | 8.3 | 6.9 | 78.4 | 87.0 | 11.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.4 | 70.3 | (1.6) | 727.6 | 732.5 | 0.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.3 | 30.0 | 23.5 | 238.8 | 254.6 | 6.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 35.8 | 33.4 | (6.6) | 364.2 | 341.4 | (6.2) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.1 | 7.8 | 8.6 | 105.4 | 135.2 | 28.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 58.5 | 41.5 | (29.1) | 512.3 | 408.5 | (20.3) |
| இரசாயன உற்பத்திகள் | 13.6 | 14.5 | 7.1 | 141.6 | 148.7 | 5.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.5 | 10.3 | (18.0) | 116.9 | 111.7 | (4.4) |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 1.5 | 5.4 | 258.5 | 24.8 | 38.5 | 55.1 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 9.1 | 7.0 | (23.2) | 128.2 | 89.2 | (30.4) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.6 | 6.2 | (6.1) | 63.9 | 61.3 | (4.1) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 15.0 | 13.4 | (10.7) | 138.5 | 148.7 | 7.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.7 | 2.2 | (20.3) | 26.7 | 25.0 | (6.6) |
| ஏனையவை | 21.5 | 25.7 | 19.5 | 232.6 | 230.3 | (1.0) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **217.3** | **210.2** | **(3.3)** | **2,175.0** | **2,079.1** | **(4.4)** |
| தேயிலை | 115.5 | 113.8 | (1.5) | 1,208.2 | 1,139.1 | (5.7) |
| இறப்பர் | 2.4 | 1.2 | (50.8) | 27.5 | 21.3 | (22.7) |
| தேங்காய் | 28.6 | 26.3 | (8.0) | 266.7 | 284.8 | 6.8 |
| வாசனைத்திரவியங்கள் | 33.2 | 32.6 | (1.9) | 302.5 | 267.4 | (11.6) |
| காய்கறிகள் | 3.0 | 2.9 | (4.6) | 23.9 | 27.0 | 12.6 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.5 | 2.2 | (13.7) | 29.2 | 28.0 | (4.4) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 8.7 | 12.1 | 38.7 | 102.5 | 92.1 | (10.1) |
| கடலுணவு | 23.3 | 19.2 | (17.7) | 214.4 | 219.6 | 2.4 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.8** | **3.5** | **21.6** | **30.0** | **28.1** | **(6.3)** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.6** | **1.5** | **(5.5)** | **14.7** | **14.2** | **(3.6)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **979.1** | **977.3** | **(0.2)** | **9,876.7** | **9,960.5** | **0.8** |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2019 ஒத்தோபரில் வணிகப்பொருள் இறக்குமதிகள் 3.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) ஐ.அ.டொலர் 1,816 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையுடன் இப்பொருட்களின் இறக்குமதி 12ஆவது மாதமாக தொடர்ந்தும் சுருக்கமடைந்தமைக்கு நுகர்வுப்பொருட்களினதும் முதலீட்டுப்பொருட்களினதும் இறக்குமதிகள் குறைவடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது.


- 2019 ஒத்தோபரில் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகள் அதிகரித்த போதும், நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழச்சியே காரணமாக அமைந்ததுடன் தனியாள் உந்து ஊர்திகளின் தாழ்ந்த இறக்குமதிகளே இதற்குத் தூண்டுதலாக அமைந்தன. எனினும், 2019இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2019 யூலையிலிருந்து உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் சராசரியாக, ஒப்பீட்டு ரீதியில் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் விளங்கி சலுகை அடிப்படையிலான உரிமப்பத்திரத்தின் கீழ் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீண்டும் ஆரம்பமாகிவிட்டமையின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது. அதேவேளை, உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு உள்நாட்டு வெங்காயத்தின் குறைந்த நிரம்பலை துணைநிரப்புச் செய்வதற்காக உயர்ந்தளவில் அது இறக்குமதி செய்யப்பட்டமையே முக்கிய தூண்டுதலாக அமைந்தது.

- 2019 ஒத்தோபரில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு தாழ்ந்த பன்னாட்டு விலைகளுக்கிடையிலும் மசகெண்ணெய் மற்றும் நிலக்கரியின் உயர்ந்தளவு இறக்குமதிகளின் விளைவாக எரிபொருள் மீது ஏற்பட்ட செலவினமே தூண்டுதலாக அமைந்தது. மேலும், 2019 ஒத்தோபரில் அடிப்படை உலோக இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கின் இறக்குமதிகளே தூண்டுதலாக அமைந்தன. எனினும், கோதுமை மற்றும் சோளம் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு அளவின் தாக்கம் முக்கிய காரணமாயமைந்த வேளையில் புடவை மற்றும் புடவைப்பொருட்கள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு நூலிழை மற்றும் துணிகளின் இறக்குமதிகள் குறைவடைந்தமை வழிவகுத்தது.

- அதேவேளை, 2019 ஒத்தோபரில் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் கசியும் தாக்கம் உட்பட, கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட சராசரிக்கும் குறைவான வளர்ச்சியின் விளைவாக அனைத்துத் துணை வகைகளிலும் காணப்பட்ட தாழ்ந்த செலவுகள் காரணமாக அமைந்தன. இதன்படி, முக்கியமாக புடவைக் கைத்தொழில் மற்றும் பொறிகளின் உதிரிப்பாகங்களுடன் தொடர்பான பொறிகள் மற்றும் சாதனங்களின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்த வேளையில், போக்குவரத்துச் சாதனங்களின் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு இழுபொறிகள், அம்புலன்சுகள் மற்றும் முச்சில்லு வண்டிகள் போன்ற வர்த்தக ரீதியான ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். கட்டடப்பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு இரும்புச் சட்டங்கள் மற்றும் கம்பிகளின் தாழ்ந்த இறக்குமதிகள் காரணமாக அமைந்த போதும் பாலங்கள் மற்றும் பாலங்களின் கட்டுமானத்துடன் தொடர்பான இரும்பு மற்றும் உருக்குப்பொருட்கள் 2019 ஒத்தோபரில் தொடர்ந்தும் அதிகரித்தன.


- 2019 ஒத்தோபரில், இறக்குமதி அளவுச் சுட்டெண் 3.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகு பெறுமதிச் சுட்டெண் 7 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளே முழுத் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | ஒத் 2018 (ஐ.அ.டொ. மில்.) | ஒத் 2019 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன–ஒத் 2018 (ஐ.அ.டொ. மில்.) | சன–ஒத் 2019 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **438.5** | **383.3** | **(12.6)** | **4,259.1** | **3,195.3** | **(25.0)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 121.2 | 128.9 | 6.3 | 1,360.4 | 1,138.2 | (16.3) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.5 | 4.0 | 58.5 | 118.0 | 28.8 | (75.6) |
| இதில் அரிசி | 1.0 | 1.5 | 53.1 | 102.5 | 10.1 | (90.1) |
| பால் உற்பத்திகள் | 29.5 | 25.5 | (13.6) | 273.6 | 250.4 | (8.5) |
| காய்கறிகள் | 20.6 | 29.6 | 43.9 | 256.1 | 237.2 | (7.4) |
| கடலுணவு | 16.6 | 19.0 | 14.6 | 166.6 | 179.0 | 7.5 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 13.4 | 17.5 | 30.4 | 210.1 | 160.2 | (23.8) |
| வாசனைத்திரவியங்கள் | 11.2 | 10.6 | (5.9) | 95.6 | 90.1 | (5.8) |
| குடிபானங்கள் | 9.6 | 9.3 | (2.6) | 73.8 | 67.6 | (8.4) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 17.9 | 13.4 | (25.0) | 166.7 | 124.9 | (25.1) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 317.3 | 254.4 | (19.8) | 2,898.7 | 2,057.1 | (29.0) |
| தனியாள் ஊர்திகள் | 160.8 | 84.6 | (47.4) | 1,391.4 | 651.0 | (53.2) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 48.6 | 54.2 | 11.6 | 442.1 | 453.6 | 2.6 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 22.8 | 26.9 | 18.2 | 260.1 | 230.6 | (11.4) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 23.0 | 19.2 | (16.7) | 199.3 | 165.7 | (16.8) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 19.7 | 25.9 | 31.4 | 226.8 | 199.4 | (12.1) |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 14.6 | 17.7 | 21.3 | 143.6 | 140.4 | (2.3) |
| ஏனைய நுகரக்கூடிய உணவல்லாப்பொருட்கள் | 27.8 | 26.0 | (6.7) | 235.5 | 216.4 | (8.1) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,017.5** | **1,040.2** | **2.2** | **10,430.3** | **9,420.7** | **(9.7)** |
| எரிபொருள் | 265.9 | 308.3 | 15.9 | 3,431.0 | 3,238.8 | (5.6) |
| இதில் மசகெண்ணெய் | 62.0 | 95.0 | 53.3 | 776.0 | 824.3 | 6.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 200.9 | 192.4 | (4.2) | 2,504.6 | 2,245.2 | (10.4) |
| நிலக்கரி | 3.1 | 20.9 | 579.7 | 150.4 | 169.2 | 12.5 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 13.2 | 19.0 | 43.2 | 542.9 | 158.1 | (70.9) |
| இதில் தங்கம் | 0.5 | 0.0 | (99.5) | 438.6 | 2.3 | (99.5) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 279.7 | 277.1 | (0.9) | 2,371.3 | 2,404.2 | 1.4 |
| இரசாயன உற்பத்திகள் | 90.1 | 76.9 | (14.7) | 761.1 | 698.2 | (8.3) |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 64.0 | 61.0 | (4.7) | 585.8 | 506.1 | (13.6) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 46.6 | 46.6 | 0.0 | 441.3 | 382.7 | (13.3) |
| அடிப்படை உலோகங்கள் | 46.6 | 69.1 | 48.2 | 519.8 | 477.8 | (8.1) |
| வளமாக்கி | 23.1 | 27.4 | 18.5 | 210.9 | 194.9 | (7.6) |
| கோதுமை மற்றும் சோளம் | 53.9 | 33.0 | (38.8) | 326.6 | 266.9 | (18.3) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 20.2 | 20.9 | 3.8 | 254.2 | 190.2 | (25.2) |
| வேளாண்மை உள்ளீடுகள் | 17.5 | 14.9 | (14.7) | 170.9 | 155.6 | (9.0) |
| கனிம உற்பத்திகள் | 20.8 | 26.4 | 26.5 | 158.2 | 185.4 | 17.2 |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 75.8 | 59.7 | (21.3) | 656.4 | 561.8 | (14.4) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **425.7** | **391.0** | **(8.2)** | **3,970.4** | **3,789.4** | **(4.6)** |
| பொறி மற்றும் கருவிகள் | 233.5 | 218.2 | (6.5) | 2,112.1 | 2,034.9 | (3.7) |
| கட்டடப் பொருட்கள் | 138.7 | 133.8 | (3.5) | 1,279.4 | 1,277.2 | (0.2) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 53.1 | 38.5 | (27.4) | 573.8 | 471.9 | (17.8) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.5 | 0.4 | (24.6) | 5.1 | 5.3 | 3.7 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.7** | **1.2** | **75.8** | **73.7** | **6.4** | **(91.3)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,882.5** | **1,815.7** | **(3.5)** | **18,733.5** | **16,411.8** | **(12.4)** |

(அ) தற்காலிகமானவை
மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி


## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் உறுதியான மீட்சியொன்று அண்மைய மாதங்களில் அவதானிக்கப்பட்டிருக்கிறது. 2019 ஒத்தோபரில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 118,743 ஆக விளங்கி, 2019 செத்தெம்பரின் 27.2 சதவீதம், ஓகத்தின் 28.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2019 ஒத்தோபரில் வருகைகளில் 22.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. ஐக்கிய இராச்சியம், சீனா போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன.

- 2019 ஒத்தோபரில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள், 2018 ஒத்தோபரின் ஐ.அ.டொலர் 287 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 223 மில்லியனாக மதிப்பிடப்பட்டது. ஒன்றுசேர்ந்த நியதிகளில் 2019இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,538 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,806 மில்லியனாக மதிப்பிடப்பட்டது.


- அதேவேளை, 2019 ஒத்தோபரில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 607 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 1.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஒன்றுசோ்ந்த அடிப்படையில் 2019 முதல் பத்து மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5,537 மில்லியனுக்கு 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்


- 2019 ஒத்தோபரில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடு ஐ.அ.டொலர் 12 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இவ்வாண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 280 மில்லியனாக விளங்கின.

- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2019 ஒத்தோபர் மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன. இருப்பினும்கூட, 2019இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான நிதியியல் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2019 ஒத்தோபர் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 102 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 ஒத்தோபர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.8 பில்லியனாக விளங்கி 4.7 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. அதேவேளை, 2019 ஒத்தோபர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனாக விளங்கி 6.3 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**





**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 ஒத்தோபரில் சில தேய்வு அழுத்தங்களின் அவதானிக்கப்பட்டமைக்கிடையிலும் 2019 ஒத்தோபர் இறுதி வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கை ரூபா தொடர்ந்தும் உயர்வடைந்தது. மேலும்,

2019 திசெம்பர் 13ஆம் திகதி வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 1.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா, ஸ்ரேலிங் பவுண் மற்றும் கனேடிய டொலர் தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | (2019 திசெம்பர் 13 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +1.0% |
| யூரோ | -12.7% | +3.4% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -4.9% |
| யப்பானிய யென் | -18.1% | +0.2% |
| கனேடியன் டொலர் | -9.3% | -2.4% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +3.0% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.0% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி